கூசாதே நட்டோடே மேலே யேறு
யேப்பிட்ட அமுரியிலே யிரங்காதுப்பு
யிதுவுமொரு கற்பமா யிருக்குந்தேகம்
ஊய்ப்பட்டனை கூப்பாலே பச்சையுப்பைத் தின்றால்
போய்த்திருந்த சித்தியெல்லாம் மண்ணாய்ப்போமே
௫௯.

மேற்கூறப்பட்ட கட்டிய உப்பினைச் சாப்பிட்டால் சமாதி நிலைக்கு ஆதாரமான புருவ மைய நடுவிலுள்ள ஒளி தெரியும். பராசக்தி உன்னை அழைப்பாள். நீரில் இந்த உப்பானது கரையாது. இவ்வுப்பானது சிறந்த கற்பமாக உள்ளது. உப்பைக் கட்டாது பச்சையாகவே சாப்பிட்டால் சித்திகள் அனைத்தும் நீங்கிவிடும்.

போமென்ற உப்புக்குக் காரமேற்றி
புகழாக உள்திடவே சுண்ணமாகும்
தானென்ற சுண்ணத்தில் சாரஞ் சேர்க்கச்
சீலமாகுமிதுக் குள்ளே வீரம் போட்டு
ஆமென்ற சரக்கையெல்லாந் தொய்த்துவாட்ட
அசையாது அசையாது மணி போலாமே
நாமென்ற நவலோகத் துள்ளே யீய்ந்தால்
நிலையாறு மாற்றாகும் நயந்து காணே.

சுய.

மேற்கூறிய உப்பிற்குக் காரத்தினை ஏற்றி உள்திட சுண்ணமாகும். இச்சுண்ணத்துடன் சாரத்தினையும் வீரத்தினையும் சேர்த்துக் கொள்க. அனைத்துச் சரக்குகளையும் சேர்த்து உருக்கிக் கட்ட மணியாகும். ஒன்பது வகை உலோக வகைகளாகிய பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா, துத்தநாகம், வெண்கலம் ஆகியவற்றுக்கு மாற்று கொடுக்க இருபத்து நான்கு தங்கமாகும்.

காணப் பா யிதையெ டுத்துச் சிலவுசெய்து
கனமான கற்பத்தை தீதின்றுயேறு
வீணப் ப--- --- வகதியில் உயென்று
வேதாந்த வாலையைத்தான் நித்தம் பூசி
தோணப்பா யென்னைப் போல சொன்னார் இல்லை
சொன்னதினால் இத்தரையின் மேல் பலையுமாச்சு
உணப்பா யிதைவிட்டுக் கற்பஞ்சொல்வேன்
உத்தமனே வைகுசாறுக் குஉரைத்துப்பாரே
சுக.

மேற்கூறிய கட்டப்பட்ட உப்பினைக் கற்பமாக எண்ணியே உட்கொள்ள வேண்டும். வேதாந்தத்தை அறிந்து வாலையைப் பூசி என்னைப் போல் கூறியவர்கள் எவருமில்லை. ~~இது~~ இது போன்றே வேறு கற்பங்களையும் இன்னும் கூறுவேன்.

பாரப்பா அரப்பொடியை பழச் சாத்திட்டு.
பாங்காக ஊற வைத்து மூன்று நாள்தான்
பாரப்பா உரசியதைக் கழுவிப் போட்டு
நிறுத்தலோ பலமஞ்சு எடுத்துக்கொண்டு
நேரப்பா பலமொன்று கட்டிய நேருப்பு.
தின்னொடு அரைப்பலந்தான் வீரம் போட்டுச்
சேரப்பா வெண்காரம் பலமோரெண்டு
திறமான சாரமது பலமுங் காலே.

௫௨

அரப்பொடியை எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் ஊற வைத்து பின் மேற் படிந்துள்ளதை நீக்கி கருவியெடுத்துக்கொள்க, சுத்தித்ததில் 175கி அளவு எடுத்துக் கொள்க. 35கி கட்டிய உப்பு, 18கி வீரம், வெண்காரம் 70கி, சாரம் என்னும் நவச்சாரம், 9கி, துருசு, துத்தம் வகைக்கு 18கி, சூதம் 9கி எடுத்துக் கொள்க. வெடியுப்பு நீர், சாரநீர் இவற்றால் வகைக்கு 6 மணி நேரம் ஆட்டிக் கொள்க.

சீனாளோடு அரைப்பலந்தான் துருசு போட்டு
வகுமுறையாய் அரைப்பலந்தான் துத்தம் போட்டு
சேளோடு ஆதமதில் கால்ப்பலமும் போட்டு
திரமாக வைடரையப்பு நீராலாட்ட
சூதலோடு சாரநீர் விட்டு ஆட்டச்
சூதகமாயிருந்தும் யிரண்டு சாமம்
வேலோடு எலியாலவம் பருப்புத் தானும்
வெமச்சவே ரெண்டு பங்கு கூடப் போட

சூத

எலியாலவம் பருப்பை இரண்டு பங்கு சேர்த்துக் கொள்க. இடித்துச் சூரணமாய்ச் செய்து ஐந்து பங்காய்ப் பகுத்துக் கொள்க. அதில் ஒரு பங்கினை அரப்பொடியன் சேர்த்துக் கொள்க. குகையில் சீல் கொண்டு மூடி உருக்கிக் கொள்க. ஆறிய பிறகு எடுத்து உடைத்து வைத்துக் கொள்க. ஒரு பங்கினைப் போன்று ஐந்து பங்கையும் உருக்கிக் கொள்க.

மோட்டமடித்து அஞ்சு பங்காய்ப் பகுந்துகொண்டு
புகழாக ஒருபங்கு அரப்பொட்டியில் கொட்ட
நீட்டத்தைக்கையிலிட்டுச்சில்லுப் போட்டு
நேராகத்தாக் குகையிலுருக்கி அதை
மீட்டத்தை யுடைச்செடுத்துநாறுக்கிக்கொண்டு
நீல ஒருபங்கிட்டு உருக்கிநீயும்
மூட்டத்தாயிப் பட்டையே அஞ்சுபங்கும்
புகழாக உருக்கிடவே யாடும் பாரே
௪௪

பின் பக்கத்திலேயே இணைந்துள்ளது.

பாரப்பா யிந்தயத் துக்கிடையே தங்கம்
பாய்ச்சியொரு மையாக உருக்கி வாங்கி
நேரப்பா யதிலேயொரு காஞ்சு வாங்கி (ழ)
நிலைக்க ஒரு குகையிலே உருக்கும் போது
தாரப்பா நாகமொரு காஞ்சு போட்டு
சுகமாக வாங்கியது ஆகும் போது
காரப்பா காரியம் காஞ்சு போட்டு (ழ)
கிண் திறந்து கண் திறந்து பிரளுந் தானே.

ஈரு.

அந்த அயத்திற்கிடையே தங்கத்தை 5கி

~~தங்கத்தை~~ மையாக உருக்கி அதில் 5கி எடுத்து குகையில் வைத்து உருக்கிக் ~~கொள்ள~~ (பொழுது) வேண்டும். அதனுடன் 5கி நாகத்தைப் போட்டு அது உருகும் போது 5கி காரியத்தைப் போடுக.

தாணாகக்கண்திறந்து பிரளும் போது
தாக்கத்திலே டுக்கள் ளந்திகைந்தானும்
தெணாகாந்தை குமிதனை வாங்கி
செம்புரெண்டும் வெள்ளியெட்டும் சிறக்கவாட்டு
கொணாணகாநீக மொன்றுகொடுத்தாயானால்
இறையாது ஏழுரை தான் கூர்ந்துபாரு
டாணாண லோகமங்கே யொன்றுமானால்
பண்பான காயசித்தி சொல்லக்கேளே.

சுகா

அனைத்தும் உருகிக்குழையும் போது 15கி கெந்தகத்தையும் 1கி செம்பையும் 40கி வெள்ளி-யையும் சேர்த்து உருக்கி வாட்டினால் ஏழுரை மாற்று தங்கமாகும். இதனைக் கொண்டால் காயசித்தியாகும்

கோப்பா உருக்கின தோரிரும் பிடைக்குத்தங்கம்
கெட்டியாக வைத்துருக்கி யெடுத்துக்கொண்டு
நீளப்பா யிதிற்பாதி சூதங் கூட்டிச்
சீதகமாய்ச் சுத்தி ரெட்டிக் கெந்தி
நீளப்பா யிதிற் கூட்டிப் பொற்றலையின் சாற்றில்
நீதியா அரைத்தொரு சாமம் வில்லை செய்து
நீளப்பா ஓட்டிலிட்டுச் சீலை செய்து
நிலமாக லகுபுடம் போட்டிடாயே.

ரன

உருக்கின இரும்பையும் அதற்குச் சம அளவு தங்கத்தையும் சேர்த்து உருக்கி எடுத்துக் கொள்க. உருக்கினதின் பாதி சூதம் இரசம் சேர்க்க. ~~சூதத்தின்~~ இரசத்தின் பங்கிற்கு இரண்டு மடங்கு கெந்தகம், கூட்டிக் கொள்க. பொற்றலையின் சாற்றால் ~~அரைத்து~~ மூன்று மணி நேரம் அரைத்து மாத்திரை செய்து ஓட்டில் போட்டுக் ~~கொள்க~~. சீலை மண் செய்து எளிய புடம் போட வேண்டும்.

போடவே புடந்தோறும் கெந்தியிட்டு
புகழாக ஏழுபுடம் போடுசும்மா
மட்டுவாய் பின்பு புடங்கனமாய்த்தீயும்
நீங்கியது செந்தூரமாகுமட்டும்
மாட்டுவாய் செந்தூரமானபின்பு
அப்பனே கொற்கஞ்சு சர்க்கரையில் கொண்டு
தீட்டுவாய் காயமதுயிரும் புத்தாணுக்கு
செயலோடு மண்டலந்தான் கொண்டுதேரே
சுஅ

இவ்வாறு ஒவ்வொரு புடத்திற்கும் கெந்தகத்தைச் சேர்த்து ஏழு புடம் போட வேண்டும். மறுபடி புடத்தைக் கனமாக ~~போட~~ செந்தூரமாகும் வரை போடவும் ~~செந்தூரமாகும்~~. 1/4 கி இச் செந்தூரத்தை எடுத்து தேவையான அளவு சர்க்கரையைச் சேர்த்து நாற்பத்தெட்டு நாட்கள் உட்கொள்ள உடலது இரும்பாகும்.

தேறியபின் காந்தமென்றாகிற் பங்கேளு
சீர்காறிய மயிர்க்காந்தம் உருக்காக்காந்தம்
மாறிய தோருசியைப் பிடிக்குங் காந்தம்
வைமந்தனே யரக்கான காந்தமொன்று
ஆறிய தோர்த்து நாலிவரக்கு நன்று
அப்பனே கிடையாதட்டால் நீதான் கேளு
கூறிய தோருசிதனைப் பிடிக்குங் காந்தம்
கொண்டுவந்து நெருக்கி நன்றாய்ப் பிடைத்துப் போடே

௪௯

காந்தத்தினால் ஆன கற்பத்தை இப்போது இயம்புகின்றேன் கேளுங்கள் மயிர்க்காந்தம், உருணைக் காந்தம், உசாசிக் காந்தம் (ஊசிப்பிடிக்கும்) அரக்கு காந்தம் ஆகிய நால்வகைக் காந்தங்களுள் அரக்கு காந்தம் நன்மை பயப்பதாகும் அது கிடைக்காவிட்டால் ஊசி ~~காந்~~ (ஊசிபிடிக்கும்) காந்தத்தை இடித்து புடைத்து ~~போட~~

போடப்பா வெள்ளாட்டு ரத்தத்துள்ளே
புரட்டியல்லோ வெள்ளாட்டுதன் கொழுப்பும் போட்டு
நீடப்பா வதின் தோலில் கட்டி நன்றாய்
நிதியான நெற்குழியில் கூட வைத்து
ஆடப்பா நாலு திங்களானபின்பு
உத்தமனே யிதை யெடுத்து உருக்கக் கேளு
கூடப்பா யிந்துப்புக் குப்பாதி காரங்
குறையாமல் காரமுங் அய்காந்தம் பத்தே.

ருய

வெள்ளாட்டு இரத்தத்திற்குள் போட்டுப் புரட்டி ~~கொள்க~~. அதனுடன் வெள்ளாட்டுக் ~~உள்ள பாத்திரத்தை~~ கொழுப்பையும் சேர்க்க. ~~அதனை~~ வெள்ளாட்டுத் தோலில் வைத்துக் கட்டி நெற்~~பாத்திரத்தின்~~ குதிரின் இடையில் வைத்து விடுக. நாலு மாதங் கழித்து அதனை எடுத்து உருக்கிக்கொள்க ~~உருக்கிய அதைக் குப் பாதி~~ இந்துப்புடன் அக்காரம் குறையாத அளவுக்கு காரமுள்ள 125கி வெங்காரமும் 350கி காந்தமும்

(தி.பி.ப)

பத்தோடு துருசுரெண்டு பலமுங்கூட்டி
பாங்காகச் சாரமரைப் பலமும் போட்டு
கொத்தோடு சண்ணுமிணுழுந்து மொச்சை
குறையாமல் கோதும்பை குன்றுமணி யெள்ளு
இத்தோடு புறாவெச்சம் சர்க்கரை தேன் வேண்டி
இறப்பாக வகையொன்று பலமொன்றுமாக
நயத்தோடு ஆட்டுரத்தம் விட்டு ஆட்டி
லேமாக அஞ்சுறைது செய்வாயே.

ருக.

துருசு, 17½
→ 70கி, நவச்சாரம், உளுந்து, மொச்சை,
கோதுமை, குன்றிமணி, எள், புறாவெச்சம்,
சர்க்கரை, தேன் இவற்றை வகைக்கு 35கி
எடுத்து, ஆட்டு இரத்தத்தை விட்டு ஆட்டி
அரைத்து பங்காக்கிக் கொள்க.

செய்தபின்பு காந்தத்தை யொருகூறுகூட்டித்
திராவநன்றாய்த்தரக்குகையிலூதியாட்டு
செய்தபின்பு உடைத்தெடுத்து ஊதிப்போட்டு
டாங்காகயின்னொருமாறுபங்குகூட்டி
செய்தபின்பு முன்போலே உருக்கியாட்டி
நலமாகி அஞ்சுபங்குமுடைத்துடைத்தூது
செய்தபின்பு காந்தமது சத்தாய் நிற்கும்
காயசித்திக்கிதன் பெருமைகாட்டுவேனே

௬௨.

ஒரு பங்கு காந்தத்தைச் சேர்த்து உலையில் ஊதியாட்டு. ஆறிய பிறகு உடைத்துப் போட்டுக் கொள்க. மற்றொரு பங்கையும் சேர்த்து உருக்குக. இவ்வாறே ஐந்து பங்கையும் உடைத்து ஊத, காந்தம் சத்துப் பொருளாய் தோன்றும். காயசித்திக்கு மிகவும் உகந்தது இது.

கூட்டுவென் காந்த சத்துப் பலந் தானிரண்டு
கற்பசமில்லாத தங்கம் பலந் தானொன்று
பூட்டுறவே ரெண்டுமொன்றாய் உருக்கி வாங்கி
உத்தமனே சூதமிதில் பலந் தானொன்று
நீட்டுறவே கெந்தகமும் பலந் தான் நாலு
நேரயிதைப் பொற்றலையின் சாற்றாலாட்ட
மூட்டுறவே வில்லை தட்டி ஓட்டால் மூடு
கொண்ட மணல் மறைவில் புடத்தைப் போடே
ரே

70கி. காந்தச்சத்து; 35கி தங்கம் எடுத்து இரண்டையும் சேர்த்து உருக்கிக் கொள்க. 35கி சூதம் (ரசம்), 140கி கெந்தகம் இவையிரண்டையும் சேர்த்து பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றாலாட்டி மாத்திரை செய்து ஓட்டில் வைக்க. ஓடு கொண்டு மூடி மணலில் புடம் போடுக.

போடப்பா யிப்படியே பதினாலு புடந்தான்
புகன்றாக நீயெடுத்து அரைத்துக்கட்டி
நீடப்பா ஓட்டிலிட்டுச் சீலைசெய்து
நேரப்பா வெளிப் புடமா யேத்திப் போடு
ஊடப்பா செந்தூரமாகுமட்டும்
உத்தமனே புடம் போட்டுத்தீர்ந்து வாங்கி
தேடப்பா ரெண்டுபண விடைகாந்தந் தானும்
தினந்தோறும் மண்டலந்தான் தின்னுவேறே

௫௪

இவ்வாறே பதினான்கு முறை புடம் போடுக. பிறகு எடுத்து அரைத்து ஓட்டில் போட்டு சீலைமண் செய்து வெளிப்புடம் போடுக. செந்தூரம் ஆகும் வரை புடம் போட்டு ஆறிய பிறகு எடுத்துக் கொள்க. அதனைப் பத்திரப்படுத்திக் கொள்க. நாள்தோறும் 975 மி.கி அளவு நாற்பத்தெட்டு நாட்கள் உட்கொண்டு வரவும்.

(த.ப.பா)

நரையிலே காயமெல்லாஞ் சிவந்துமின்னும்
எழுந்ததொரு நரைகளெல்லா முதிர்ந்துபோமே
தெரையிலே கண்கள்ரெண்டுஞ் சிவந்துமின்னுந்
சிறுபிள்ளைமுகம் போலே சிறந்துகாணும்
நரையிலே யுடம்பெல்லாம் கஸ்தூரிவீசும்
நிலமான தந்தமெல்லா மிறுகியேறுங்
கூறயிலே காந்தசித்தி சூக்குமைத்தக்
கோரக்கர் சித்தியெல்லா மிருக்குள்ளாச்சே
௫௫

உடல் சிவப்பாகவும் மினுமினுப்பாகவும் விளங்கும். நரை முடிகள் உதிர்ந்து விடும் கண்கள் ~~சிவப்பாகி மினுமினுப்பாகும்~~ [மின்னும்]. சிறு குழந்தைகளின் முகம் போல இளமையுடனும் எழுச்சியுடனும் இருக்கும். உடலில் கஸ்தூரி மணம் வீசும். பற்கள் இறுகி வலுப்பெறும், சித்தி அனைத்தும் கைவரப்பெறும்.

ஆச்சப்பா காந்தசத்தால் வேதை சொல்வேன்
அண்டரண்டம் தாண்டப் போம் பட்டாகப் போம்
சேச்சப்பா யிதின் வேதை சித்தர்மெச்சும்
ஊட்டுகிறவர்கை சொல்வேன் சந்தனந்தா
பார்த்ச் சப்பா காந்தசத்தின் சமனாய்த் தங்கம்
பரிவாக ரண்டதைக்குச் சமனாய் நாகம்
சேர்ச்சப்பா உருக்கையிலே நாகமிடை சூதம்
கூட்டரையா ருமணியாகவாங் குவாங்கே.
ருகா

காந்த சத்தால் உண்டாகும் வேதையை இப்போது இயம்புகின்றேன். அண்டரண்டம் தாண்டும் வேதையை சித்தர் ~~மெச்சும்~~ பாராட்டுமளவுக்குக் கூறுகின்றேன். காந்த சத்திற்குச் சமமாய் தங்கத்தையும் இரண்டின் அளவிற்கு ~~சேர்த்து~~ நாகத்தையும் சேர்த்துக் கொள்க. நாகத்தினிடையில் ~~சூதத்தைச்~~ சேர்த்தி மணியாக ~~உருட்டிக்~~ கொள்க. ~~வெற்றி~~

வாங்கியந்த மணியிடைக் கெந்தகந்தான் கூட்டி
மருவிய தோரம் மணிக்கு மனோசிலையுங் கூட்டி
ஓங்கியிதைப் பொடியாக்கிக் குப்பிக் கேற்றி
உத்தமனே வாலுகையிலெரித்து யேறு
தாங்கியது செந்தூரப் பதத்தைக் கேளு
சிவாணை யிட்டால் கதிர்காக்கு மடையிலே தான்
பொங்கியிந்தப் பதத்தோடு செந்தூரம் வாங்கி
புகழாகத் தேவியைத் தான் பூசை பண்ணே.

குரு

மணியின் ~~எடை~~ எடைக்கு கெந்தகம், மனோசிலையைச் சேர்த்துப் பொடித்துக் கொள்க. குப்பியில் ஏற்றி வாலுகையில் எரித்துப் பதத்துடன் செந்தூரமாகும் (பதம் — ...) சிவாணை இட்டால் அதன் அடியில் கதிர் காக்கும் அதை எரித்து பக்குவத்துடன் எடுத்து வைத்துக் கொள்க. தேவியை பூசை பண்ணவும்.

பூசைபண்ணு அவர்பதமும் சிவனுடையபதமும்.
புகழ்பெரிய வீரன் திருவாணிபதமும்
பூசைபண்ணி வைத்துவை தீபானம்பண்ணி
போக்கோடே தாரகத்தில் நின்றுபாரு
பூசைபண்ணமறந்தாக்கால் காயசித்திபொய்பொய்
பூட்டுகிற வேதையும் பொய்யாமய்யா
பூசைபண்ணத் தேவியுட பதத்துத்தீட்சை
புகழாகக்கேட்டவரேஇருந்தார்தானே

௫அ

பார்வதி, சிவன், ~~அ~~ருகன் பாதங்களைப் போற்றி பூசைகள் செய்து கொள்ள வேண்டும். பூசைகள் செய்யாவிட்டால் காயசித்தி, வேதை தீட்சைகள் அனைத்தும் பொய்யாகி விடும்.

ஆமப்பா காந்தமென்ற செந்தூரத்தை
அறையிறேன் வேதைகேட்டக் கேளு
ஓமப்பா செம்பிலே நூற்றுக் கொன்று
உத்தமனே வெள்ளியிலெண் பதுக்கொன்று
மாமப்பா குடவனிலைம் பதுக்கு ஒன்று
நாலைம்பா தீர்வதனில் பத்துக் கொன்று
திறமாக இரும்பிலே முப்பதுக்கு வொன்று
தாக்கிப் பார் சரிமாற்றுத் தப்பாவாரே

௫௪.

ம் செய்யும் முறையை வேதைக்காக

காந்த செந்தூர~~த்தை வேதைக்குப் பயன்படும் விதத்தைக்~~ கூறுகிறேன். செம்புக்கு நூற்றுக் கொன்று, வெள்ளிக்கு ~~யின்~~ எண்பதுக்கு ஒன்று, சாம்பு ~~பித்தளையின்~~க்கு ஐம்பதுக்கு ஒன்று, ~~தகரத்துக்கு பத்துக்கு ஒன்று~~, இரும்புக்கு முப்பதுக்கு ஒன்று என்று மாற்று கொடுக்க வேதையாகும்.

ஊறான பூநாகங் குளக்கரைகள் தோறும்
மண் தின்றுகக்கியல்லோ மூத்தாய் நிற்கும்
தாரான மத்தை டுத்துத் தண்ணீர் வார்த்து
சரசமா யரித்திருத்து அடியில் பார்க்க
வீறுகப் பளபளப் பாய் மின்னிக்கொண்டு
விளங்கிய தோர் சத்தெல்லாங்கி லேநிற்கும்
கூறாகயிதுவெல்லாம் வழித்துக்கொண்டு
குமுற வெகாரமிட்டு உருக்கிடாயே.

சாய

மண்ணைத் தின்று கக்கிய பூநாகப் புத்து

~~மண்ணினைத் பூநாகம்~~

~~பூநாகம் தின்று கக்கிய புத்து~~ குளக்கரையில்
இருக்கும். அதனை எடுத்து தண்ணீரில் கரைத்து
அரித்து பாத்திரத்தின் அடியில் பளபளப்பாய் மின்னும்
சத்து தங்கும். அதனை எடுத்து வெங்காரத்தை
இட்டு சேர்த்து உருக்கிட வேண்டும்.

உருக்கியது மண் போலவே யெடுத்துக் கொண்டு
உத்தமனே கருவகாயல் வீரங்காரங்
அருக்கியிது நாலுக்கு வையொன்று கூட்ட
மைந்தனே குகையிலிட்டு நன்றாயூது
தெருக்கியிதுமணி போல நன்றாய் நிற்கும்
சிவ சிவா பூரணச் சந்துமாச்சு
அருக்கியினை தக்கொல்லாமலுருக்கச் சொன்னேன்
சொல்லுக் கேசித்த ரெல்லாமெச்சினாரே

சா.க.

உருக்கியபின் உள்ள மணிபோன்ற இவ்வுப்பை எடுத்து அதனுடன் கருவகாயல், வீரம், வெள்ளைக்காரம், இவற்றை உருக்கி மணிக்கு நால்பங்கு ... அந்த தனைச் சருக்கி குகையில் போட்டு நன்றாய் ஊத மணியாய் தோன்றும். அதுவே பூரணச் சந்துமாகும். இதனை எடுத்துக் கொண்டு

மைச்சினதோர் சத்துக்கு நாலத்தொன்று
மேலான தங்கத்தைச் சமனாய்க் கூட்டி
மைச்சியதோர் தங்கத்திடை சூதங் கூட்டி
விதமான கற்றா(ரீ)ம் பாலாஷாணைத்துக் கூட்டி
நேர்ச்சினதோர் வில்லையைத் தான் மூட்டல் வைத்து
உத்தமனை மணல் மறைவில் புடந் தான் பத்தே
௬௨

பூநாகச்சத்துக்குச் சமமாய் தங்கத்தைச் சேர்த்துக் கொள்க. தங்கத்தின் எடைக்குச் சமமாக ~~சூதம்~~ இரசம் சேர்க்கவும், காறாமைச் ~~பாஷாணம்~~ சாரம் அரைத்து ~~சாத்திரை~~ வில்லை செய்து மூட்டில் வைத்து ~~மூக்கு~~ மூடு ~~மண்ணில்~~ மணல் ~~வைத்து~~ மறைவு புடம் பத்து ~~புடம்~~ முறை போடுக. இடவும்

பத்தான புடமிட்டெருவேற்றிப் போட்டு
பாங்காகப் பத்துந்தான் தீர்ந்தபின்பு
முத்தான கத்தாழம் பாலாலாட்டி
முதிரமசைவாறு வில்லையாகத் தட்டி
அத்தான வெளியிலே புடமேற்றிப் போட்டு
அரகிர பூணைக் செந்தூரமாச்சு
சித்தாக வேணுமென்றால் தினம் ரெண்டு பணந்தான்
தேன் கூட்டிச் சர்க்கரையில் கொள்ளே

சாறு

பத்து புடமும் தீர்ந்த பிறகு மறுபடி கற்றாழைச் சாற்றால் அரைத்து வில்லைகளாகத் தட்டி மறுபடி புடம் போட செந்தூரமாகும். தினமும் 175 மி.கி. செந்தூரத்தைத் தேனில் சேர்த்து சர்க்கரையையும் கலந்து கொள்ள வேண்டும்.

கொள்ளப்பாயிருபது நாள் சட்டையொன்றுபோகுங்
கு ப்பிட்டால் சித்தரெல்லாம் வார்த்தை சொல்வார்
உள்ளப்பா அவரோடே குளிகைமார்க்கம்
வேதாந்தத் திருமேலர்மக்கிளென்றார்
உள்ளப்பா நம்முடையவர்க்கமென்று
ஓடுகிற குளிகையைத் தான் கையிலியந்து
நில்லப்பா யவருடைய வர்க்கமென்றால்
நெம்பெரிய சட்டைமுனி வர்க்கமென்னே.

சாசு

இருபது நாள்கள் சந்தூரத்தைக் உட்கொள்ள அட்...

சித்தருடைய இந்தக் குளிகை மார்க்கத்தை திருமேலர் வர்க்கம், சட்டமுனி வர்க்கமென்று கூறுவர்.

என்னவே யென்னுடைய நாமஞ்சொல்லில்
எடுத்தகனத்துச் சித்தரெல்லாமியல்வாய்ப்பேசி
மன்னவே சட்டைமுனி நூலுக்குள்ளே
வர்மமென்னவென்று சொல்லிக் கேட்டானால்
தன்னவே சனகாதி மேலரோடு
சபையாகக் கைலாசத்திருக்கும் போது
பன்னவே கொங்கணரன்னூலை வைத்துப்
பாடியுங்கோவென்று பகுந்திட்டாரே
௬௫

சட்டமுனி நூலுக்குள் வர்மம் என்னவென்று கேட்டால் கைலாசத்திலிருக்கும் இறைவன் கொங்கணர் நூலைப் பாடுங்கள் என்று இயம்பினார்.

பகுந்திட்ட தூசோடு மச்சமுனிதானும்
பாடினார் சபையெல்லாங் கேட்டுமெச்ச
அகுந்திட்ட வாதத்திலாயிரத்தொன்று.
மைந்தனே காயசித்திக்கிதுதா நூறும்
நெகுந்திட்ட பன்னிரண்டு நூறும்
நிலமான ஞான மதுரெண்டுநூறு
வாகுத்திட்ட இருபத்து அஞ்சுநூறு
தெளிப்பில் சித்தருக்காமென்றார்காணே.

காகா

கொங்கணர் நூலொடு மச்சமுனியாரும் சபையோர் பாராட்டும்படி பாடினார். வாதத்திற்கு ஆயிரத்தொன்றும், காயசித்திக்கு நூறும், ஆயிரத்திரு நூறும், ஞானம் இருநூறும், இரண்டாயிரத்து ஐந்நூறும் சித்தர்களுக்கானவை என்று கூறினார்கள்.

ஞானப்பா அதின் பிறகு யிருநூறு பாட்டு.
கைமுறையாய் தீட்சைவிதி பாடினதைப் பார்த்து
உண்ணப் பா தீட்சைவிதி சத்தி மார்க்கம்
உத்தமனே நிசதீட்சை சிவத்தின் மார்க்கம்
தோணப்பா வெட்ட வெளியாகச் சொன்னேன்
சொன்னதொரு யிறுநூறு பாட்டும் பார்த்து
ஆணப்பா ஆணுவத்தால் சொன்னானென்று
அரைச்சனைத்திலென் னையங்கே அழையென்றுரை
கான

தீட்சைவிதி இருநூறு பாடினார்கள். தீட்சை விதி, சத்தி மார்க்கம், நிசதீட்சை, சிவ மார்க்கம் (வழி), அனைத்தையும் கூறினேன். இருநூறு பாடலை மட்டும் பார்த்துவிட்டு ஆணவத்தால் சொன்னார் என்று என்னை அங்கே அழைத்து வரும்படி கூறினார்கள்.

அழைச்சயென் மச்சமுனி கூட்டிப்போனார்;
அப்பவல்லோ சனகாதிசித்தரெல்லாங்
குளச்சுகுருவலக்காதில் சொல்லுந்தீட்சை
கொழுப் போடா பாடினதுவென்று கேட்டு
மூளச்சுகுருசித்தருக்கு நீயோ சொல்லு
மூதண்டச்சின்மயத்தைத் தள்ளி நேரே
இளச்சுகுருவானரோ சித்தரெல்லாம்
இடும்போ நீ பாடினதுவெனச் சொன்னாரே

காஅ

மச்சமுனி என்னை அழைத்துச் சென்றார். (கு)(ந)
அப்போது உலகிலுள்ள சித்தரெல்லோருக்கும்
~~இளக்குரு~~ வலது காதில் சொன்ன தீட்சையை
நீ கொழுப்போடு பாடி விட்டாயா, சித்தருக்கு
நீயே தறி விடு' என்றனர். நீ பாடிய
பாடல்கள் சிறப்பானவையா? மற்றவை
தாழ்வானவையா? என்றனர்

சொன்னமொழி கேட்டயர்ந்து நிற்கும்போது
திப்பரயான மேலிரு இருநூறும் வாங்கி
பன்ன நல்லபாவென்று கிழித்துப் போட்டார்
பாடினதோர் இருபத்தி அஞ்சுநூறும்
இன்ன நல்ல சித்தருக்காமென்று சொல்லி
கைகொடுத்துக் குகைக்குள் வைவையுமென்றார்
இன்னபடி சட்டைமுனி நூல்தான் சித்தர்
யிருபத்துவஞ்சநூறிதுபாரென்னே.

சி.சு.

சொன்னவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது இருநூறு பாடல்களை மேலிருவானவர் வாங்கி நல்ல பாடல்கள் என்று பெருமை கொண்டார். ~~கிழித்துப் போட்டுவிட்டார்.~~ 'இரண்டாயிரத்து ஐந்நூறு பாடல்கள் சித்தருக்கான நல்ல நூல்' என்று கூறி குகைக்குள் வைக்கச் சொன்னார். சட்டைமுனி நூல் இரண்டாயிரத்து ஐநூறு கைத்தான் ~~தான்~~ ~~சிறந்தது~~ என்றார்.

பாரென்றுங் கையெடுத்துச் சித்தர்மெச்சி
பாரங்காகக் கவனத்தே அழைச்சுப் போவார்
தீரனென்ற கறுப்பாக்கி மூலிகையைத் தானும்
சாதகமாய்வதின் பிறகு அண்டோர் கற்பம்
நேரென்று பூமியிலே குழியை வெட்டி
நிஜவாகச் செங்கொட்டை வெட்டிப்போட்டு
தூரென்று முழுவுசரம் பரப்பிக்கிதே
அகமாக நிரம்ப மண்ணை மேலே போடே

ஏய

சித்தர்கள் பாராட்டி பாரென்று அழைத்துப் போவார்கள். இன்னும் மூலிகையை ஆய்ந்த பிறகு கற்பம் உண்டென்று உணர்வர். பூமியிலே குழியை தோண்டி வெட்டி செங்கொட்டையை நன்கு இடித்துப் பரப்பிப் போட்டு மண்ணை மேலே பரப்பவேண்டும்.

தோட்டத்தின் மேல் நீர் விட்டுக் காயாமல் கட்டு
பகலாகமென்றானால் கருகிப் போகும்
தோட்டத்திலே இறுக வகைக் கொத்திப் பார்த்து
கோரகமண் கறுத்தப் பத்தானால் பார்த்து.
தோட்டத்திலே முருங்கைக் கொட்டை போட்டாயானால்
மேதண்ட மாறு திங்கள் பொருமி நிற்கும்
தோட்டத்திலே சலம் விட்டு மேலே திண்டால்
காயாட்டாலே ஏழு திங்கள் தோனுமாமே.

௭௧.

அதன் மேல் தண்ணீர் விட்டு வரண்டு போகாத அளவுக்குக் கட்ட வேண்டும், என்று நான் கழித்துப் பார்க்க ~~கருகிப் போகும்~~. சிறிதளவு கொத்திவிட வேண்டும். மண் கறுப்பான பத்தாம் நாள் முருங்கைக் கொட்டையை அதில் போடுக ஆறு மாதத்தில் ~~மேலெழுந்த~~ வளரு இருக்கும், அதில் தண்ணீரை ஊற்றி விட்டு விட்டால் ஏழு திங்களில் தோனாகி விடும்.

ஆமப்பா வெட்டியதோர் கொட்டையானால்
அதையில் லு மூன்று திங்கள் வித்தெல்லாம் விடலாம்
ஓமப்பா வெட்டாத கொட்டையானால்
ஓரெட்டு திங்களிலே வித்தெல்லாம் போடு
சேமப்பா வித்தை தெளிப்பதென்றால்
செப்புகிறேன் நீலியொடு கரிசாலை கரந்தை
தாமப்பா பொற்றலை வல்லாரையோடு
சாதகமாய் சிறு செருப்படையும் போடே

௭௨

வெட்டிய கொட்டையாயிருந்தால் மூன்று மாதங்களில் விதைகளைப் போடலாம். வெட்டாத கொட்டையாயிருந்தால் எட்டு மாதங்களில் விதைகளைப் போடலாம். விதைகளைப் போடுவதென்றால் நீலி, கரிசாலை, கரந்தை, பொற்றலைக் கையாந்தகரை, வல்லாரை, சிறு செருப்படை ~~போடு~~ போன்றவைகளை பயிர் செய்யலாம்.

போடப்பா குமரிதன்னை ஓமந்தானும்
புகழான நிலப்பனையும் புகழ் கொல்லங்கோவை
நீட்டப்பா திருமேனி வீழி வீழி
நிலையான குறைமயக்கி சிவனார் வேம்பு
ஊட்டப்பா கொடுவேலி யிதுகளெல்லாம்
ஒவ்வொன்றாய் வரிசையுடன் பயிரே செய்து
சூட்டப்பா தேவிபதம் பூசை பண்ணு
திணங்கலாய் மறந்துவிட்டால் பயிராகாதே.

பாடு

கற்றாழை, ஓமம், நிலப்பனை, கொல்லங்கோவை, குப்பைமேனி, வீழி, சிவனார்வேம்பு, கொடிவேலி இவையனைத்தையும் அவ்வொன்றாக பயிர் செய்து தேவி பாதத்திற்குப் பூசை செய்க அவ்வாறு மறந்து விட்டால் பயிராக வளராது.

பயிரான மூலிகைதான் முதல் தரத்தில் கேளு
பாங்காகக் கால்வாசி கறுப்பேயாகும்
பயிரான மறுதரத்தில் அரைவாசி கறுக்கும்
பாங்கான மறுதரத்தில் முக்கால்வாசி
மூயிரான மறுதரத்தில் முழுவாசி கறுக்கும்
மோசமில்லை கறுப்பாகுமென் பெரியோர் செய்தார்
பயிராகுங் கறுப்பதற்குச் சோதனைதான் சொல்வேன்
மைந்தனே மனமகிழக் கண்டடாயே

எசா

மூலிகைகள் பயிராகும் தரத்தைக் கேட்பாயாக. முதல் தரப்பில் கால் பங்கு பயிர்கள் கறுப்பாகும். இரண்டாம் தரப்பில் அரைப்பங்கு பயிர்களும் மூன்றாம் தரப்பில் முக்கால் வாசி பயிர்களும் மறு தரப்பில் முழுபங்கு பயிர்களும் கறுப்பாகும். அவ்வாறு ~~ஆகாதிருப்பதற்குச்~~ ஆகாதிருந்தால் சோதனையை மனம் மகிழும் படி கூறுகின்றேன்.

தின்றுகொள்ளச் சோதனைதான் சொக்கிறதாங்
கைமுறையாய் முழுக் கறுப்பின் பனிநீர்க் குகேள்ளோ
தின்றுகொள்ளப் பிரட்டையைத் தெய்த்துப்போட,
சாதகமாய்க் காகத்தின் நிறமே யாகும்
ஒன்றுகொள்ளக் கழுவியதைத் தேய்த்தாயுஞ் சோ
உண்டவர்க்கு மயிர்களுக்குஞ் சமுசயமேயில்லை
பண்டுகொள்ளக் காலறுப்பை முன்னே கொள்ளு
பாங்காகவரைக் கறுப்பைப் பின்னே கொள்ளே.

௭௫.

~~அதனை அறிய கொக்கின் இறகை கழுவிப்பார் பனிநீர் இல்லை மிருக தெய்த்து பார் 22~~

மேற்கூறிய அக்கறுப்பைச் சோதனை பல செய்தாலும் காகத்தின் நிறம் போன்ற கறுப்பாகவே யிருக்கும். பனிநீர்க்கொண்டு கழுவினாலும் ~~போகாது~~ நிறம் மாறாது. அதைச் சாப்பிட்டவர்க்குத் தலை மயிர் கறுப்பாகும். சந்தேகம் இல்லை கால் கறுப்பை முன்னும் அரைக் கறுப்பைப் பின்னும் கொள்ள வேண்டும்.

கொள்ளப்பா வதன் பிறகு முக்கால் வர்ணங்
கூடாதே முடிக்கறுப்பைச் சொன்னீர் தின்று
டாளப்பா சட்டையொன்றாகி நூன்று போகும்
உத்தமனே ரோமமெல்லாந் தும்பி போலாம்
மெள்ளப்பா முந்தி முந்தி வல்லாரை கொள்ளு
விராங்கிய பின் கரந்தை கொள்ளு கரிசாலி கொள்ளு
நில்லப்பா குமரி கொள்ளு ஆமங் கொள்ளு
நிலமானசை செருப்படையும் வீழி கொள்ளே.

எகா

~~கருப்பை~~ மும் பின்னர் ~~[illegible]~~ பின்னையும்

முக்கால் ~~(நரைத்தை)~~ பிறகு சாப்பிட வேண்டும். [illegible] ரோமங்கள் தும்பி போன்றாகி விடும். முதலிலே வல்லாரை, கரந்தை, கொள், கரிசாலை, குமரி, ஆமம், செருப்படி, வீழி, ஆகிய மூலிகைகளைப் படிப்படியாகக் கொள்ள வேண்டும்.

ஶ்ரீதிகொண்ட மச்சமுனி யூழிகாலம்
லெதாக்கீதச் சமாதியிலேயிருந்துமீண்டார்
ஆளிகொண்ட கமலமுனிகொடுவேலி கொண்டு
உடங்காக சமாதியிலேபுகுந்தானின்றார்
ஊாளிகொண்ட பிரம்மமுனி செருப்படையையுண்டு
உறங்காமல் சமாதியிலேயிருந்துபோனார்
குளிகைகொண்ட வாசமுனி பொற்றலையைக் கொண்டு
அகமாகச் சமாதியிலேயிருந்திட்டாரே

என

மச்சமுனி ஶ்ரீதியை உட்கொண்டு சமாதியிலே ஊழிக்காலம் இருந்தார். கமலமுனி கொடிவேலியைக் கொண்டு சமாதியிலே யுகம் வாழ்ந்தார். பிரமமுனி செருப்படையையுண்டு சமாதியில் இருந்தார். வாசமுனி பொற்றலைக் கையாந்தகரையைக் கொண்டு சமாதியிலே பலகாலம் வாழ்ந்தார்.

இருந்திட்டார் கஞ்சாவால் கோரக்கர்தானும்
ஏழுயுகங் கடந்தபின் புவைசூந்திருந்தார்
இருந்திட்ட கரிசாலை கொங்கணர்தான் கொண்டு
ஆச்சரியம் நாலுயுகம் வாதம் பார்த்தார்
பெருந்திட்ட திருமேனி அருபானந்தர்
பேணியுண்டு சமாதியிலே யுகந்தானின்றார்
பொருந்திட்ட கொல்லனுட கோவையுண்டு
போகமுனி கோடவரை யிருந்திட்டாரே

௭௮

சமாதியில் இருந்த பின்

கோரக்கர்ன் கஞ்சாவைக் கொண்டு ஏழு யுகங்கள் ~~வாழ்ந்தார்~~ ஏழு. கொங்கணர் கரிசாலையை ~~உ~~ண்டு நாலு யுகமும் வாதம் பார்த்தார் அரூபானந்தர் குப்பைமேனியைச் சாப்பிட்டு யுகமும் போக முனிவர், கொல்லங் கோவையைக் கொண்டு கோடிக்காலமும் வாழ்ந்தார்.

இருந்திட்ட மடு தோறும் அந்தரானந்தர்

எல்லாரும் கறுப்பாகஞ் செய்த மாந்தர்

பருந்திட்ட குழிவெட்டி இரண்டாளம் மட்டும்

பாங்காக அது நிறையச் செங்கொட்டை போட்டு

வைகுந்திட்ட மண் போட்டு அதின் மேலய்யா

வைத்தாரே கருநெல்லி கருந்நொச்சி

கிருந்திட்ட கஞ்சாவும் கொடிய வேலி

கை முறையாய் வைத்தார்கள் கருத்துப் போச்சே

௭௧.

அந்தரானந்தரின் கறுப்பாகச் செய்யும் வழிமுறையை [சொன்னார்] ~~உள்ளது~~. அகலமான குழியை இரண்டாளம் [ஆழம்] ~~அளவுக்கு~~ வெட்டி அதில் செங்கொட்டையை முறையே நிறையுமளவுக்குப் போடுக. அதன்மேல் மண்ணையும் கருநெல்லி, கருநொச்சி, கஞ்சா கொடிவேலி இவற்றையும் மேலே ~~வைத்தார்கள்~~. ~~வைக்க அப்பொழுது~~ [வளர்க்க கருப்பாகும்].

இறுத்திருந்த மேலினைதான் குகை தோறும் நிற்கும்
னாக முறையாயிதுகண்டு கிடந்தபின்பு
நிறுத்திருந்து குளிகையிட்டு தூடரச்சென்று
உத்தமனே யவரவரைக் கேட்டுஉண்ணு
மறுத்திருந்து திருடாதே பொய்சொல்லாதே
வாயாடாதத்திரியாதே நமக்கோ சொந்தம்
பொறுத்திருந்த சட்டைமுனியின் சாயம்தானை ன்றும்
போகு முன்னே கைகொடுத்துப் புகழ்செய்வாரே

அய

இவ்வாறு இருந்து

மூலிகை ~~[illegible]~~ கள் குகை~~யில்~~ தோறும் இருக்கும். பின் இவைகளை எதை எப்படி சாப்பிட வேண்டுமென்று நிமுற்றவரைக் கேட்டு அதன்படி செய்ய வேண்டும்.
திருடாது பொய் சொல்லாது வாயாடாது இருப்பின் சட்டைமுனி உதவி புரிந்து புகழுக் -குண்டானவைகளைச் செய்வார்.

1 [struck] யிதின் பிறகு முண்டனியையுண்ணு
2 போக் கோடே சோதியொடு அணங்கவுமேயுண்ணு
3 திகளாக ரோம விருட்சஞ் சாயாவிருட்சஞ்
6 அணங் கஞ் சான் மலிவி டுவர்ட்ம் பாகுயுண்டு
7 திகழாக உண்மையைக் கண்டு தேறி
8 யிவருடைய ஞாதத்திற் கிடுபங் கேளோ
4 சாதகமாய்ச் சேர்ந்தாடு பாவையுண்ணு
5 திகளாக ச்சாமவிருட்சங் கஞ்சாயாவிருட்சம்

அக.

சோதிவிருட்சம், அணங்கன் விருட்சம், ரோம விருட்சம், சாயா விருட்சம், சேர்ந்தாடு பாவை, சாம விருட்சம், கஞ்சா விருட்சம் ஆகிய மூலிகைகள் பலவற்றில் கற்பம் எது என்பதை உண்மையை தேறி தெரிந்து கொள்ள வேண்டும்.

[illegible]

உன் வீட்டை அடைந்து, மனைக்குரிய [illegible]
சேர். சாமவிருட்சம், கஞ்சாவிருட்சம்

கேளப்பா அண்டத்தைப் பணம் போல் பொத்து
கெடயான வீரமொடு கற்பூரசாரந்
தாளப்பா வெடியுப்பு சவுக்காரச் சுண்ணம்
சாதிகமாய் வகை யொன்று பணந்தா னொன்று
நாளப்பா பொடிசெய்து நாலண்டத்தில்
நலமாகப் போட்டதை வெயிலில் வைக்க
தேளப்பா கொட்டியது வேகம் போல
இணத்திலே கண்டு கருச்சிலமொச்சே,

அ2

வீரம், கற்பூரம் ~~சாரம்~~ நவச்சாரம், வெடியுப்பு, சவுக்காரச்சுண்ணம்
இவற்றை வகைக்கு 488 மி.கி எடுத்துச் சூரணம்
செய்து நான்கு முட்டையை உடைத்து ஊற்றி பாத்திரத்தில் போட்டு வெயிலில் வைக்க
வேண்டும். தேள் கொட்டிய வேகம் போல
உடனே ~~[illegible]~~ கருநீராகும்.

ஆச்சப்பா கெந்தகமும் பலந்தான் பத்து
அப்பனே கல்வத்தில் இட்டுக் கொண்டு
ஓச்சப்பா வண்டநீர் (அண்டநீர்) விட்டு ஆட்டு
உத்தமனே அண்டங்கள் தண்ணீர் பண்ணி
வீச்சப்பா கெந்தகத்தைத் தினந்தான் மூன்று
இட்டு விட்டு அரைத்த பின்பு வெண்காரம் பலந்தான்
தேச்சப்பா கழுவியதை யிதிலே போட்டு
திறமாக வாறுநாள் தானரைத்துக் கட்டே

அரு

கெந்தகம் 350கி, எடுத்து கல்வத்தில் போட்டு அண்டநீர் (?) விட்டு அரைத்துக் கொள்க. மூன்று நாட்களும் இவ்வாறு அரைத்துக் கொண்டு கழுவிய வெண்காரத்தையும் அதனுடன் சேர்த்து அரைத்துக் கொள்க.

கிட்டுமய தோர்வில்லைதன் ஆமையோட்டுதல்
இடுக வைத்துவாலுகையிலேற்றிமெல்ல
எட்டுமய தோர்தீயெரிப்பாய் தினந்தானென்று
உறவாகக் கெட்டுப் போம் கெந்தி கெந்தி
மட்டுமய தோர் கெந்திக்குப் பாதி சூதம்
மாட்டுமயல் லோபீங்கானில் பிழிந்து போடே.

அசு

அரைத்தவற்றை ~~மாத்திரைகளாக்கி~~ வில்லைத்தட்டி ஆமையோட்டில்
வைத்து வாலுகையிலேற்றி ஒரு நாளைக்கு ~~உ~~
எரிக்க, கெந்தகம் கட்டிப்போகும். கட்டிய
கெந்திக்குப் பாதி அளவு இரச சூதத்தைப் பீங்கானில் பிழிந்து ~~போட்டுக்~~
சேர்த்துக் கொள்க.

போட்டத்திலே சவுக்காரச் சுண்ணஞ்சாரம்
புகழான வெடியுப்பு நேருங் கேளு
நீட்டையிலே வகைக்கு ஒருகாசு தூக்கி
நேராகப் பொடி செய்து அதிலே போட்டு
நீட்டையிலே துள்ளியது தண்ணீராமே
சேர்ந்து அந்தத் தண்ணீரைக் கெந்தகத்தில் விட்டு
பூட்டத்திலே தினம் மூன்று மெழுகு போல
அப்புறத்தே வாங்கி வைத்து அறையக் கேளோ.

அரு.

சவுக்காரச்சுண்ணம், நவச்சாரம், வெடியுப்பு இவற்றையும் வகைக்கு 4கி எடுத்துப் பொடித்துப் போட நீராகும். அந்நீரைக் கெந்தகத்தில் ஊற்றி மூன்று நாள் கழித்தெடுக்க மெழுகாகும்.

கேளப்பா தங்கமது குகையிலிட்டுக்
கெட்டியான செம்பதிலே நாலிலொன்று போட்டு
நாளப்பா உருகையிலே மெழுகுதானும்
சேர்ப்பாகப் பணம்போலே யதிலே போடு
தாளப்பா தங்கயிடை யிட்டபின்பு
சாதகமாய்ச் சோதிச்சு எடுத்து நன்றாய்
கேளப்பா குகையிலிட்டு அருக்கிக்கொண்டு
நலமான தேன்போலே செம்புக்கட்டே

அகா

தங்கத்தையும் அதில் ¼ (நால்) பாகம் செம்பையும் குகையில் போட்டுருக்கும்போது மெழுகு ~~[illegible]~~ (பனையை) கையும் அதில் போடு. பிறகு தங்கத்தை எடுத்து (குகையிலிட்டு உருக்கிக்கொண்டு) எடையைப் பார்த்து மீண்டும் மேற்கூறிய வாறு செம்பைச் சேர்த்துக் கொள்க.

கூட்டியல் லோகின் போலே செம்பு கூட்டி
குலாவிய தோர் தங்கத்தைக் குகையிலிட்டு
ஆட்டயல் லோ வுருகையிலே மெழுகு போட்டு
அப்பனே அப்படியே முறைகள் தோறும்
ஆட்டயல் லோ பத்துவிசை தீர்த்தாயானால்
பொன்னிற் குஞ்செம் பெல்லாம் போகும் பாரே.

அள

செம்பையும், தங்கத்தையும் குகையிலிட்டு உருகும் போது மெழுகையும் போட்டு உருக்கி இவ்வாறு பத்து முறை செய்தால் செம்பெல்லாம் தங்கமாகும்.

~~மேற்கூறியவாறு பல முறைகள் செய்ய செம்பு நீங்கி தங்கம் இருக்கும்.~~

பாரப்பா குகைதோறும் சோதித்து வாங்கி
பதறாமலெடுத்ததெல்லா முறுக்கிக் கொண்டு
நேரப்பா வோட்டவிட்டு ஊதிப் போட்டு
நிகச்சதுகம் வாரகை வைய்க்கும் பணமதிகநிற்கும்
தாரப்பா தங்கமது செம்பேயாச்சு
சாதகமாய்க் கெந்தகத்தின் செம்பினாலே
ஊரப்பா சொல்லாது செம்பில் வேதை
யோட்டவிக்க ஆண்பிள்ளையுமுண்டோ சொல்லே.

அது

முன்கூறிய முறைப்படி குகையில் வைத்து வைத்த தங்கத்தை முறுக்கி ஊட்டமல் போட்டு ஊதிவிட தங்கம் செம்பாகும். அந்த கெந்தகத்தினால் செய்யப்பட்ட செம்பினால் வேதைகள் செய்ய முடியாது.

சொல்லியதோர் செம்பினாற் குளிகை போடச்
சிகமாக நாடகங்கள் பண்ணு பண்ணு
சொல்லியதோர் செம்பினாற் கைவளையம்பண்ணு
துலங்கியதோர் நல் கட்டுக்குவளை பண்ணு
சொல்லியதோர் செம்பினாற் சித்தரெல்லாம்
சிகமாக ஆபரணம் பண்ணினாரே.

அசு.

இந்தச் செம்பினால் கைவளையம், கட்டுக்குவளை, மற்ற வளையங்கள், போன்ற பலவகை அணிகளைச் சித்தர்கள் செய்தார்கள்.

பண்ணியதோர் கெந்தகத்தின் மெழுகு நாள் சே
பணவெடைதான் ரெண்டு தினம் தின்று தின்று
எண்ணியதோர் மண்டலத்தில் உடம்பு தானும்
உத்தமனே தாமாகத் தள்ளிப் போமே
நிண்ணியதோர் மேனிதனைப் பார்க்கும் போது
நிலமான வருணனைப் போல் காணுங் காணும்
புண்ணியமே செய்தவர்க்குயித் தனையுமெய்தும்
பொய்சொல்லும் பாவிக்கெல்லாம் பொய்யே.

சுய.

கெந்தகத்தினால் செய்யப்பட்ட மெழுகை 488 மி.கி இரண்டு நாட்கள் சாப்பிட நாற்பத்தெட்டு நாட்களில் உடலானது.

உடல் வருண தேவனின் உடலைப் போல் தோன்றும். புண்ணியம் செய்தவர்க்கு இவை அத்தனையும் பொருந்தும். பொய் சொல்வோர்க்குப் பொய்யேயாகும்.

பொய்யாகும் நூல் கொடுத்த குருவைப் பார்த்து
புகழாகத் தூஷணித்தால் போகும் பாழாய்
பொய்யாகுங் காயசித்தி வாத முதலென்றால்
போக்கோடே கோடிசென்மம் புலையனாவான்
பொய்யாகுந் தேவியுடவாமமென்றால்
புகழாகவிதத்திலே பெருவயறுமாவான்
பொய்யாகுமுலகத்தே சித்தருண்டோவென்றால்
போஜனமுங்கிட்டாமல் புலையனுமாவானே.

சிகே

நூல் கொடுத்த குருவைப் பார்த்து இகழ்ந்து பேசினால் அனைத்தும் பாழாகும். காயசித்தி, வாதம் இவை பொய்யென்றால் பல கோடி ஜென்மங்கள் கீழ்ச்சாதி மகனாய் பிறப்பான். தேவியுடைய அழகும் ஒளியும் பொய்யென்றால் அவனுக்கும் பெருவயறு வந்து துன்பப்படுத்தும். உலகத்தில் சித்தர்கள் இருப்பது பொய்யென்றால் உணவும் கிடைக்காது தாழ்ந்த நிலையையடைவான்.

கனபுடம்
கஜபுடம்

ஆமப்பா முன்னெடுத்த தங்கச் செம்பை
அமைத்து நன்றாய்த் தகடாக வதிலே கேளு
ஓமப்பா வாலீரங் கெந்தகமுங் கூட்டி
உறவாகத் தகட்டுக்கு ப்பாதி பூசி
சேமப்பா அப்பிரகத் தகட்டதல் வைத்து
திறமாகத் தகடு கொண்டு மூடக் கட்டி
தேமப்பா வோட்டதனிட்டு மூடு மூடி
தீக்கொளுத்திக் கஜபுடமாய்ச் சிறக்கச் செய்யே

௯௨

முன்னர் கூறிய தங்கச் செம்மை அமைத்துத் தகடாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதனுடன் வாலைரசம், கெந்தகம் இவற்றைச் சேர்த்துத் தகடின் மேல் பாதி பூசிக் கொள்ள வேண்டும். வைத்து அப்பிரகத் தகட்டின் அப்பிரகத் தகட்டின் அத்தகட்டினை வைத்து மூடி கட்டி ஓட்டில் வைத்து மூடி கஜபுடம் ( ) வைத்து எரிக்க வேண்டும்.

செய்யயிலே தேவியைநீ பூசைபண்ணு
திடமாகச் சமாதியிலேயிருந்துபாரு
மையயிலே தாரகத்தில் தேவிநின்று
வாச் அதடா வாச் அதடா காயசித்தியென்பாள்
கையிலே வாதசித்தின் கவனசித்தி
கைமுறையாய்ப் பலித்துதடா மைந்தாவென்பாள்
கொய்யயிலே யாறுதலம் வெளியாய்க் கட்டு
கூப்பிட்டுச் சாகரத்தின் குறிசொல்வாளே

௯௩

மேற்படி மருந்துகளைச் செய்யும்போது தேவியை நீ நினைத்து பூசை செய்வாயாக. சமாதியிலே நீ இருந்துக் கொள். தேவி வானில் நின்று இவை கைமுறையாய் காய சித்தி, வாத சித்தி, கவன சித்தி கிடைத்து விட்டது என்று கூறுவாள்.

உலகத்தில் குறியைச் சொல்வாள்.

சொல்லியதோர் புடமாறிக் குளிர்ந்தபின்பு
அழகாகப் பூசித்தெடுத்துப் பாரு
மெல்லியதோர் பொடியாக மொறுங்கிநிற்கும்
மைந்தனேயிதனையெடுத்து வைத்துக்கொண்டு
சொல்லியதோர் பொழுதுக்குக் குன்றியுண்ணு
ஓங்கியதோர் மண்டலத்திலொளியேமீறும்
இன்னியதோ ரிருட்டறையிலிருக்கும் போது
கதிரொளியோ கலைமதியோ வென்பார் காணே

சுசு

~~[illegible]~~ வைத்த புடம் ஆறிக் குளிர்ந்த பிறகு பூசை செய்து எடுத்துப்பார்க்க, தகடானது வெள்ளைப் பொடியாய் ஆகியிருக்கும். இதை 130 மி.கி அள வெடுத்து நாற்பத்தெட்டு நாட்களுக்குத் தொடர்ந்து உட்கொள்ள ஒளி அதிகமாகும். இருட்டறையில் இருக்கும் போது சூரிய ஒளி போன்றும், சந்திர ஒளி போன்றும் இருப்பார்கள்.

காணப்பா பூசைசெய்ய முறையைக் கேளு
கைமுறையாய்ச் சிவபரனை வைத்துப் பூசை செய்வார்
பூணப்பா சிலபேர் தான் தீபம் வைத்துப்
புகழாகப் பூசை செய்வார் பெண்ணை வைத்து
நாணப்பா சக்கரத்தைப் பூசை செய்வார்
நம்முடைய பூசையென்ன மேருப் போல
உணப்பா நாற்பத்து முக்கோணம் பார்த்து
உத்தமனே பூசை செய்வார் சித்தர் தானே.

சூ

பூசை செய்யும் முறையைக் கேளுங்கள். சிவபரன், தீபம், பெண்கள், சக்கரம், நாற்பத்து முக்கோணம் இவற்றை வைத்துப் பூசை செய்வார்கள். நாற்பது முக்கோணத்தை வைத்துப் பூசை செய்வார்கள் சித்தர்கள்.

தானென்ற மேருவைத் தான் பூசைசெய்தால்
ராயாட்டானண்ட ரண்டந் தீயாய் வேகும்
தேனென்ற மேருவுக்குத் தீட்சை வேணுஞ்
சிறுபிள்ளாய் மற்றவரால் தீண்டப் போகா
வானென்ற மேருவைத் தான் பூசைசெய்வோர்
வாய்திறந்து உபதேசஞ் சொன்னாரானால்
கோனென்ற வாதசித்துக் காயசித்து
கொள்ளாபிட்டானவன் சீசன் கூறினேனே

சுகா

மேருவை நாம் பூசை செய்தால் அண்டங்கள் தீ போன்று வெந்து விடும். மேருவுக்கு தீட்சை செய்ய வேண்டும். சிறுபிள்ளைகள் செய்யக் கூடாது. மேருவிற்கு மந்திரம் கூறி பூசையைச் செய்தால். உபதேசம் [illegible] வாதசித்து, காயசித்து, கைவரப் பெற்றவனாவான்

கூறிய தோர் வாலையிலே மூன்றெழுத்தைக் கொண்டு

~~ஐமந்தனை யிவளை நீ பூசை பண்ணி~~

கூறிப் பரிந்து பூசை செய்து பின்னுங் கொண்டு

மாறிய தோர் திரிபுரையினை யெழுத்தைக் கொண்டு

ஐமந்தனை யிவளை நீ பூசை பண்ணி

தேறிய தோர் புவனையுனை யெழுத்தைக் கொண்டு

திறமாகப் புவனையை நீ பூசை பண்ணி

ஆரிய தோர் மனோயாற்றை யெழுத்தைக் கொண்டு

அவளுடைய பாதம் போற்றிப் பூசை பண்ணே

சீன

வாலையிலே மூன்றெழுத்தைக் (   ) கூறி

பூசை செய்து திரிபுரசுந்தரியின் எழுத்தைக் கூறி

அவளுக்குப் பூசை செய்து புவனேசுவரியின் எழுத்

-தைக் கூறி அவளுக்குப் பூசை செய்து

. . . . . . எழுத்தைக் கூறி பாதத்தினைப்

போற்றி பூசை செய்து கொள்ள வேண்டும்.

பண்ணியபின் சாமளா யந்தெழுத்தைக் கொண்டு
பண்பாகத் தீட்சை ஐந்தும் முடித்துப் பின்பு
உண்ணியதோர் வாசியென்ற யோகத்துக்கு
மைந்தனே பிராணாயம் பண்ணித் தீடு
எண்ணியதோர்த் தகையுமர்ந்து தீர்ந்தால்
காயசித்தி பண்ணையிலே விக்கினங்களில்லை
நண்ணியதோ உலகமென்ன சித்தரென்ன
உத்தமனை விட்ட குறையறுக்குங் காணே

கஅ

சியாமளாவின் அந்தெழுத்தைக் கூறி தீட்சை ஐந்தும் முடித்து வாசி தன்னும் மேச்சினை அடக்குவதற்கு பிராணாயாமம் செய்து விடு. மேற்கூறிய அத்தனையும் முறையோடு செய்தால் காயசித்தி அடைவதற்கு எவ்வித தடைகளுமில்லை. துன்பமுமில்லை. குறையனைத்தும் நீங்கி விடும்.

காணப்பா காயசித்தி பண்ணும் போது
காட்டதேன் வாழையிலே தின்னுமாகில்
பூணப்பா வாழையைப் போலென்றும் வாழ்வார்
உயர்வான வயவர்தனத்தே தின்றாகில்
பூணப்பா யெவ்வனமே யென்றும் வாழ்வார்
புழுக முப்பதிலே தின்றனாகில்
தோணப்பா முப்பது போலென்றும் வாழ்வார்
சிகமான அண்பதிலே தின்றால் கேளே

சி.சி.

காயசித்தி செய்யும் போது வாழையிலே
தின்றால் வாழையைப் போல் என்றும் வாழ்வர்.
~~பூநூறையை~~ பொருளையும் எடுத்துப் பயன்படுத்த [அதனை உண்ணுபவன்]
~~தாதவரெனில்~~ [இளமையுடன் இருப்பான்] எங்கும் எப்போதும் வாழ்வார்.
முப்பதிலே தின்றால் முப்பது போல் என்றும்
வாழ்வார். ~~ஐம்பதிலே ஐம்பதுபோல்~~

(த.மி.பா)

கோளப்பா அன்பது போய்ப்பதினாறுஞ்
செடையானைசுபதிலே தின்றானால்
வாளப்பா யிருபது போலென்றுந்தான்
வாங்காமல் தின்றுவிடும் வாத்திகூடா
நாளப்பா யிது மேலே வயசு மிஞ்சி
நரம்பெல்லாந் தளர்ந்து போங்கடனம்யாரு
வாளப்பா வர்த்த சிவன் சொன்னமார்க்கம்
வெவ்வேறய்ச் சித்தர் சொன்னவித்தைபாரு

87

ஐம்பது வயதிலே சாப்பிட்டால் ஐம்பது வயது போய் பதினாறு வயது போல் ஆகும். எழுபது வயதிலே சாப்பிட்டால் இருபது போல் வயதாகும். இதற்கு மேலும் வயதாகி நரம்பு தளர்ந்து போனவர்களுக்குச் சிவன் சொன்ன வழி கடினம் தான். சித்தர்கள் கூறிய வித்தைகளைப் பார்த்தறிந்து கொள்க.

பாரப்பா காயசித்திசெய் முறைக்கும்
பற்றிட்டுப் பாரம் வைத்தாப் போலே சொன்னேன்
நேமப்பா சித்தர் சொன்ன கற்பத்துக்கு
என்னுடைய நூலுக்கு மிணைசந்து பாரு
தாரப்பா தொட்டல் லோமெட்ட வரைக்குஞ் சொன்னேன்
சொல்லாதே ஒளித்திட்டார் சித்தரெல்லாஞ்
சாயப்பா குருபதத்தைக் காத்தால் சித்தி
காயசித்தி யாதனை தோர் காட்டி முன்னே.

லாக.

காயசித்தி அடையும் முறையை பந்தினை வைத்து அதன் மீது கனமான பொருளை வைத்ததற் கொப்ப தெளிவாகக் கூறினேன். சித்தர்கள் கூறியுள்ள கற்பத்தையும் என்நூலிலுள்ளதையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சித்தர்கள் சொல்லாது மறைத்து வைத்ததை நான் தெளிவாக கடைசி வரையுஞ் சொன்னேன். குருவின் பதத்தைப் போற்றினால் சித்தியடையலாம். காயசித்தி அடையும் முறை முற்றுப் பெற்றது.

இக்கட்டுரை, எழுத்தை சரிபார்த்து, பத்திரிகையோர் செம்மையுற அச்சுக்கு வழங்கலாம்.

20.